<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,ARAKKONAM, RANIPET DISTRICT.</u>

**PAGE NO.140/2019**

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII of Criminal Procedure)

| | | | | |
|---|---|---|---|---|
| Calender | : | CC.49/2018 | | |
| Miscellaneous | : | | | |
| Preliminary Register | : | | | |
| Sessions | : | | | |
| Deposition of witness for | : | Prosecution | : | PW-4 |
| | | Defence | : | |
| | | Court | : | |
| Name | : | ரவிச்சந்திரன் | | |
| Father's Name | : | வேலாயுதம் | | |
| Village | : | சுவால்பேட்டை | | |
| Taluk | : | அரக்கோணம் | | |
| Caste | : | - | | |
| Calling | : | பால் வியபாரம் | | |
| Religion | : | இந்து | | |
| Age | : | 51 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 03.03.2020

ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. புகார்தாரர் ரமேஷை தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் (ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்) ஆகிவற்றில் உள்ள முதலாவது கையொப்பங்கள் என்னுடையது தான் அவை முறையே <u>அ.த.சா.ஆ.3 மற்றும் அ.த.சா.ஆ.4</u> ஆகும். புகார்தாரர் ரமேஷ் எனது தெருவை சேர்ந்தவர் அவர் வண்டி காணாமல் போனது என்று காவல் நிலையம் சென்று புகார் அளித்தார். அங்கு என்னை கையெழுத்து போட சொன்னார்கள் போட்டேன். மேற்படி 2 ஆவணனத்தில் என்னுடன் பால் வியபாரம் செய்யும் முரளி என்பவரும் கையெழுத்து போட்டார். போலிசார் என்னை விசாாணை செய்தார்கள்.

கு.வி

இந்த வழக்கில் காணாமல் போனதாக சொல்லப்படும் வண்டி என்ன வண்டி என்று என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சாட்சிகள் ரமேஷ், ராஜா,

குகன், யுவராஜ், ஆகியோர் நண்பர்கள் என்றால் சரிதான். புகார்தாரர் எனது நண்பர் என்பதால் காவல் நிலையம் சென்று கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். என்னுடன் இருந்த யுவராஜ் மற்றும் அருண்குமார் காவல்நிலையத்தில் உள்ள படம் வரைந்த பேப்பரில் கையெழுத்து போட்டார்கள் என்றால் சரிதான். சம்பவ இடம் வீட்டின் எதிரில் என்றால் சரிதான். நான் ஆஜர் எதிரியை தற்போது தான் நீதிமன்றத்தில் முதன் முறையில் பார்க்கிறேன் என்றால் சரிதான். ரமேஷ் எனது நண்பர் என்பதால் அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.